**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 328/2021**

திருமதி. மணிமேகலை (P.W. –1) **17.3.2025**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. என்ன படித்துள்ளேன் என்றால் படிக்கவில்லை. கையொப்பம் போட தெரியுமா என்றால் தெரியும். வ.சா.ஆ–1 கிரைய ஒப்பந்த ஆவணம் என்று தெரிந்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரி. 1ம் பிரதிவாதி கணவரிடம் வா.சா.ஆ–1 ஏற்படுவதற்கு முன்பு என்ன தேதியில் எவ்வளவு கடன் தொகை பெற்றேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் கடன் பெறவில்லை. வா.சா.ஆ– 1 ல் கிரைய தொகை ரூ.1,80,000/– என்று கிரைய தொகை எழுதப்பட்டு ரூ. 80,000/– முன் தொகை கொடுக்கப்பட்டதாகவும் 1 லட்சம் ரூபாய் மீதி கிரைய தொகை என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரி. 1ம் பிரதிவாதியின் கணவர் ராமசாமி எப்போது இறந்துபோனார் என்றால் தெரியவில்லை. 1 லட்சம் 1ம் பிரதிவாதி கணவரிடம் கடன் பெற்றதற்கு எவ்வளவு வட்டி கொடுத்தேன் என்று குறிப்பிட்டு முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரி.

2. 22.4.2019 ம் தேதி 1ம் பிரதிவாதியின் கணவரிடம் பெற்ற 1லட்சம் ரூபாய் கடன் வட்டியுடன் செலுத்திவிட்டதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன். அதில் அசல் தொகை எவ்வளவு வட்டி எவ்வளவு என்று குறிப்பாக

சொல்லமுடியாலது என்றால் சரி. கடன் தொகை திருப்பி செலுத்தியதற்கு ரசீது எதுவும் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரி. இவ்வாறு தொகை கொடுத்த தேதி, மாதம், கிழமை சொல்லமுடியாது என்றால் தமிழ் மாதம் சொல்லமுடியாது. வா.சா.ஆ– 1 அசல் கிரைய ஒப்பந்த ஆவணம் திரும்ப பெற்றபோது பணம் கொடுத்தற்கான ரசீதை 1ம் பிரதிவாதியின் கணவரிடம் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரி. 1ம் பிரதிவாதியின் கணவர் இறந்த பிறகு 1ம் பிரதிவாதியை எப்போது சந்தித்தேன் என்றால் 1 மாதம் கழித்து சந்தித்தேன். 1ம் பிரதிவாதியின் கணவர் இறந்தபோன விவரங்கள் எப்போது தெரியும் என்றால் 2,3 நாட்களில் 1ம் பிரதிவாதி சொல்லி தெரியும். எந்த தேதியில் 1ம் பிரதிவாதியிடம் வா.சா.ஆ– 1 ஐ ரத்து செய்துகொடுக்கும்படி கேட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. 1ம் பிரதிவாதி இறந்தபிறகு எவ்வளவு நாட்கள் என்னுடைய தாயார் நீலம்பாள் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் 15 நாளில் உடல் நிலை சரியில்லாமல் இறந்துபோனார்.

3. வா.சா.ஆ– 2 ஆவணத்தில் 22.4.2019 ம் தேதி அசல் வட்டியுடன் தொகை செலுத்திவிட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. மறுப்பு அறிவிப்பு 1,3 பிரதிவாதிகள் சேர்ந்து கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். 3ம் பிரதிவாதி என்னுடைய சகோதரர் என்றால் ஆமாம். எதிர்வழக்குரையில் 1 மற்றும் 3 பிரதிவாதி சேர்ந்து தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் ஆமாம். கடன் தொகையை திருப்பி செலுத்துவதற்காக 1ம் பிரதிவாதி அவருடைய கணவர் இறந்துபோன சமயத்தில் வா.சா.ஆ– 1 ஆவணத்தை பெற்றுக்கொண்டு கிரைய

ஆவணம் தாயார் செய்வதாக சொல்லி வாங்கி சென்றீர்கள் என்றால் தவறு. வா.சா.ஆ– 1 ஆவணத்தை யாரிடம் பெற்றுக்கொண்டீர்கள் எனறால் ராமசாமியிடம் பெற்றுக்கொண்டோம். ராமசாமியின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் ஆன்லையில் பெற்றோம் என்றால் ஆமாம். வா.சா.ஆ– 1 கடன் பெற்றதற்காக ஏற்படுத்தப்பட்டது என்று சொல்வது பொய். கிரைய ஒப்பந்த ஆவணமாகதான் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. தாவாவில் சரியான பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியிடம் பொய்யான வாக்குறுதிகளை சொல்லி அசல் ஆவணங்களை பெற்றுவந்தோம் என்றால் சரியல்ல. தாவா செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.03.17 18:17:43 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.